தேதி: 09-02-2022

O.S. No. 389/2014

வ.சா.2 திரு.பரமசிவம்

சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

குறுக்கு விசாரணை:

வழக்குச் சொத்து மொத்தம் 92 செண்ட். வழக்கு சொத்து மொத்தம் 46 செண்ட் என்றால் சரி, அந்த சொத்து எங்கள் அனுபவத்தில் உள்ளது. வழக்கு சொத்தில் உள்ள வீட்டில் நீங்கள் குடியிருப்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை. வழக்கு சொத்தின் வடபுறம் உள்ள 46 செண்ட் நிலம் 3-ம் வாதியின் தகப்பனாரும் எனது மாமனாருமான முத்துவிருதுள்ளாருக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். அதே போல் இந்த 46 நிலத்திற்கும் வடபுறம் 1 ஏக்கர் நிலம் 1968-ம் ஆண்டு உயில்படி முத்துவிருதுள்ளாருக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரி. எனது மாமனார் பெயரில் இருந்த 46 செண்ட் மற்றும் 1 ஏக்கர் நிலங்கள் ஆகியவை எனது மனைவியான 3-ம் வாதி பெயரில் பட்டா மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரி. மேற்படி 46 செண்ட் நிலத்தின் பட்டாவை தான் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் வடபுறத்தில் என் மனைவி பெயரில் உள்ளது. கருப்பண விருதுள்ளாரின் வாரிசு சான்றிதழும், அவரின் மக்களின் வாரிசு சான்றிதழும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. 3-ம் பிரதிவாதியான எல்லத்துரையின் தாயார் மற்றும் அவரது சகோதரர், சகோதரிகளை இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரி. வழக்கு சொத்து 46 செண்ட் நிலம் கருப்பண விருதுள்ளாரின் ஆண் வாரிசுகளுக்கு தான் செல்லவேண்டும் என்பதால் தான் 1968-ம் ஆண்டு உயிலில் தாவா சொத்தில் பாகம் பிரிக்கப்படவில்லை என்றால் சரியல்ல. கருப்பண விருதுள்ளாரின் ஆண் வாரிசுகளில் காளியப்ப விருதுள்ளாருக்கு மட்டும் ஆண் வாரிசு என்றால் சரி. மற்ற 3 ஆண் வாரிசுகளுக்கும் ஆண் வாரிசு இல்லை என்றால் சரி. காளியப்ப விருதுள்ளாரின் ஆண் வாரிசு வழக்கு சொத்தை அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. 3-ம் வாதியான உங்கள் மனைவிக்கு தாவா சொத்திற்கு வடபுறம் 46 செண்ட் நிலமும், அதை ஒட்டி 1 ஏக்கர் நிலமும் 1968-ம் ஆண்டு உயில்படி ஒதுக்கப்பட்டதால் 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட 46 செண்ட் நிலத்தை பொறுத்து பாகம் கேட்க உங்களுக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து 46 செண்ட் நிலம் கருப்பண விருதுள்ளாரின் ஆண் வாரிசுகளுக்கு தான் செல்லவேண்டும் என்ற விபரம் எனது மனைவியான 3-ம் வாதிக்கு தெரியும்

என்பதால் தான் அவரை விட்டுவிட்டு நான் வந்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 1969-ம் ஆண்டு முதல் 1 முதல் 3 பிரதிவாதிகளின் தகப்பனாரான காளியப்ப விருதுள்ளார் மற்றும் அவரது குடும்பத்தினர் தான் தாவா சொத்தை அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. நீங்கள் வழக்கு சொத்தை கூட்டாக அனுபவம் செய்ததில்லை என்றால் சரியல்ல. 3-ம் வாதியான உங்கள் மனைவிக்கு தாவா சொத்திற்கு வடபுறம் 46 செண்ட் நிலமும், அதை ஒட்டி 1 ஏக்கர் நிலமும் 1968-ம் ஆண்டு உயில்படி ஒதுக்கப்பட்டதாலும், கருப்பண விருதுள்ளார் மற்றும் அவரது வாரிசுகளின் வாரிசு சான்றிதழ்கள் எதுவும் தாக்கல் செய்யாததாலும் 3 பிரதிவாதியின் தகப்பனாரான ஆறுமுகத்தின் வாரிசுகளை இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்காததாலும் இவ்வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

ஒம். K.ஹரிஹரன்
முதன்மை சார்பு நீதிபதி,
பழனி.